வலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

Valampurii

க்கங்கள்: நான்கு

ங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 15 வெள்ளிக்கிழமை (01.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 337

ராம்கோ RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

பிரபாவின் மாவீரர் தின உரையையடுத்து

நோர்வேயின் சமாதானத் தூதுவர்

அரச தரப்புடன் நேற்று சந்திப்பு

திங்கட்கிழமை வன்னி செல்கிறார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரையையடுத்து நோர்வேயின் விசேட சமாதானத்தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் நேற்று கொழும்பு வந்தடைந்தார்.

கொழும்பிற்கு வந்த பௌயர் நேற்று அரசாங்கத்தரப்பினருடன் தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்தார். எதிர்வரும் திங்கட்கிழமை வன்னிசெல்லும் பௌயர் விடுதலைப்புலிகளின் முடிபுகளுடன் மீண்டும் அரச தரப்பினரை சந்திக்கவுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

குருநகரில் கிராமசேவையாளர் நேற்று சுட்டுக்கொலை

குருநகரில் தனது அலுவலகத்திற்கு முன்பாக வைத்து நேற்று 11.30 மணியுளவில் கிராமசேவையாளர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவராவார்.சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சடலத்தை பிரேத பரிசோதனைக்காக

புகையிரதம் மோதியதில் ஐந்து படையினர் பலி

(கொழும்பு)

குருநகரில் தனது அலுவலகத்திற்கு
ன்பாக வைத்து நேற்று 11.30 மணியுள
ல் கிராமசேவையாளர் ஒருவர் இனந்தெரி
ாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் யாழ்ப்பாணத்தைச்
சார்ந்த ஹிபேட் ஆனந்தராஜா (வயது 45)
ன்றி குருநகர் கிராம சேவையாளரே சுட்டுக்

கொல்லப்பட்டவராவார்.சம்பவ இடத்திற்கு
சென்று விசாரணைகளை மேற்கொண்ட
யாழ்.மாவட்ட பதில் நீதிவான் மு.திருநாவுக்
கரசு சடலத்தை பிரேத பரிசோதனைக்காக
யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்ப
டைக்குமாறு யாழ்.பொலிஸாருக்கு உத்தர
விட்டார். (ந-5)

தற்காலிகமாகவேனும் ஏ-9 வீதி திறக்கப்பட வேண்டும்

யமைச்சர் டிலான் பெரேரா கோரிக்கை

(கொழும்பு)

தியைத்திறந்து யாழ்.குடாநாட்டு
மனிதாபிமான உதவிகளை
ண்டுமென பிரதியமைச்சர் டிலான்
ரிவித்துள்ளார்.
அதிகாரப் பங்கீட்டு மூலம்
மக்களின் பிரச்சினைகளைத்

தீர்க்கவேண்டுமென அறிக்கை ஒன்றை
வெளியிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் அதிகாரப் பங்கீட்டிற்
கும் ஜனநாயக சமூகத்திற்கும் இணங்க மாட்
டார்கள் எனவும் அரசியல் அமைப்பு விவகார
மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு பிரதிய
மைச்சர் தெரிவித்தார்.(04 ஆம் பக்கம் பார்க்க)

ர்பு ஆங்கில நாளேட்டின் செய்திக்கு
வே மறுப்பும் எதிர்ப்பும் தெரிவிப்பு

(கொழும்பு)

ரித்தும் நோர்வேயின் சர்வ
ருதி அமைச்சரான எரிக்சொல்
பற்றியும் கடந்த 27 ஆம் திகதி
ம்பிலிருந்து வெளிவரும் ஆங்கில
ரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தி தவ
னது என நோர்வே வெளிவிவகார அமைச்சு
றிவித்துள்ளது.

நோர்வே விடுதலைப்புலிகளுக்கு நிதி
யுதவி அளித்தது என்னும் தலைப்பில் வெளி
யான செய்தியிலேயே இவ்வாறான பிழை
யான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதென
நோர்வே வெளிவிவகார அமைச்சு அறிக்
கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதா
வது; நோர்வேயின் (04 ஆம் பக்கம் பார்க்க)

ஐந்து பிள்ளைகளின்

(கொழும்பு)

வத்தளை கொள்ளுப்பிட்டிப் பிரதேசத்தில் இராணுவ டபிள் கப் வாகனமொன்று புகையிரத வண்டியுடன் மோதிக்கொண்டதில் 2 இராணுவத்தினரும் 3 பொலிஸாருமாக மொத்தம் 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பற்ற புகையிரதப்பாதையூடாக இந்த இராணுவ டபிள் கப் வாகனம் சென்ற போதே ,கொழும்பு நோக்கிச் சென்ற புகை யிரத வண்டி மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது மேலும் இரண்டு இராணுவத்தினரும் இரண்டு பொலிஸாரும் படுகா யமடைந்துள்ளனர். (ந-5,133)

ரவிராஜின் இடத்திற்கு ரீகாந்தா நியமனம்

நேற்று பதவியேற்றார்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.
மாவட்டத்திற்கான புதிய நாடாளுமன்ற உறுப்
பினராக மூத்த சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா
நேற்று பதவியேற்றார்.

மாமனிதர் நடராஜா ரவிராஜ் கடந்த 10
ஆம் திகதி கொழும்பில் வைத்து இனந்தெரி
யாத ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்
பட்ட பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
ஒருவரின் இடம் வெற்றிடமாக இருந்தது.

அந்த இடத்திற்கே தற்போது ஸ்ரீகாந்தா
நியமிக்கப்பட்டுள்ளார். 2007 ஆம் ஆண்
டிற்கான வரவு செலவுத்திட்ட விவாதம் நேற்று
நாடாளுமன்றத்தில் ஆரம்பமான போது
சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு டண்
பார ஸ்ரீகாந்தாவுக்கு பதவிப்பிரமாணம் செய்து
வைத்தார்.

ஸ்ரீகாந்தா தமிழீழ விடுதலை இயக்கத்
தின் (ரெலோ) மூத்த தலைவர்களில் ஒருவர்
என்பதும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில்
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில்
போட்டியிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ந-5)

இலங்கையில் சமாதான முயற்சிகள் மிகவும் மோசமடைந்துள்ளன

-சர்வதேச இடர் நிவாரணக்குழு

ஆரம்பத்திலிருந்தே குறைபாடுடைய தாக இருந்து வந்துள்ள இலங்கையின் சமா தான முயற்சிகள் இப்போது மிகவும் மோச மடைந்துள்ளது.

மேலும் அதிக வன்முறைகளை நாடு உடனடியாக எதிர்கொள்கின்றது என சர்வ தேச இடர் நிவாரணக்குழு எச்சரிக்கை விடுத் துள்ளது.

எனினும் இலங்கை அரசோ தமிழீழ விடு தலைப்புலிகளோ ஒன்றை ஒன்றை வெற்றி கொள்ளும் நிலையில் இல்லை என இனப் பிரச்சினைக்கான தீர்வுகளை ஆராயும் வல் லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சினை குறித்த புதிய ஆய்வு ஒன்றை பிறசெல்ஸை தளமா கக் கொண்டு இயங்கும் சர்வதேச இடர் நிவா ரணக்குழு நேற்று வியாழக்கிழமை கொழும் பில் வெளியிட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிர்வா கத்தின் கீழ் புத்துயிர் பெற்ற தாக்குதல்களும் வன்முறைகளும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை மேலும் கடினமாக்கியுள் ளன.

இராணுவப் போரில் இருதரப்பினருமே வெற்றி பெறுவதற்கான சாத்தியங்கள் மிகச் சொற்பமே என அந்த ஆய்வு தெரிவிக்கின் றது.

உட்பிரிவினாலும் நிதி திரட்டுவதிலும் ஏற் பட்ட வெளிநாட்டு அழுத்தங்களாலும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புப் பலவீனம டைந்திருக்கலாம். ஆனால் அவர்களை எளிதில் வெற்றி கொள்ள முடியாத வலுவான சக்தியாகத் தொடர்ந்து திகழ்கிறார்கள் என்று அக்குழு கூறுகின்றது.

விடுதலைப்புலிகளினால் இலங்கை யின் எப்பாகத்திலும் தாக்குதலை நடத்த முடி கின்றது. மரபு ரீதியான போரிலும் அவர்க ளால் அரச படைகளை எதிர்கொள்ள முடி கின்றது என விடுதலைப்புலிகளின் பலம் குறித்து அக்குழு வர்ணித்துள்ளது.

இருதரப்பினரதும் போக்கில் மாற்றம் ஏற் பட்டாலே தவிர மோசமடைந்து வரும் வன் முறைகளுக்கு உடனடித் தீர்வு எதுவும் காண முடியாது.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாக ரனின் உரையைத் தொடர்ந்து இந்த ஆய்வு அறிக்கையை இடர் நிவாரணக்குழு வெளி யிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவரது தனி ஈழம் என்ற கோரிக்கையை பெரும்பான் மை சிங்கள சமூகத்தாலும் இந்தப் பிராந்தி யத்தின் பிரதான சக்தியான இந்தியாவாலும் ஏற்றுக் கொள்ள முடியாது என சர்வதேச இடர் நிவாரணக்குழு குறிப்பிட்டுள்ளது.

இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தைக்கு இழுப்பதில் சர்வதேச சமூகம் முக்கிய பங் காற்ற வேண்டும் எனச் சொல்லும் அறிக் கை 2002 சமாதான உடன்படிக்கையை யும் மறுபரிசீலனை செய்துள்ளது.

பொருளாதாரத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலோ சமாதான உடன்படிக்கை யை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதி லோ இலங்கை அரசும் சரி, விடுதலைப்புலி களும் சரி தெளிவான பார்வை இல்லை என்று சொல்லும் அந்த அறிக்கை, அந்த உடன்படிக்கை அவசர அவசரமாகச் செய்யப் பட்டுள்ளது எனக் கூறுகின்றது. (ந-5,133)

பொறியியல் டிப்ளோமா நேர்முகப் பரீட்சை

இலங்கை உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் நடத்தப்படும் உயர்தேசிய பொறியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கு அனு மதிப்பதற்காக யாழ்.மாவட்ட மாண வர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம் மாதம் 5 ஆம் திகதி கொழும்பு மட்டக்குளியிலுள்ள இலங்கை தொழில்நுட்பவியல் நிறுவனத் தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து இந்த நேர்முகப் பரீட்சைக்கு 55பேர் அழைக்கப்பட்டுள்ளனர். பிரஸ்தாப மாணவர்கள் யாழ். அரசாங்க அதி பருடன் தொடர்பு கொண்டு பயண அனுமதி யைப் பெற்று நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-9)

க.பொ.த.(சா/த) பரீட்சை அறிவுறுத்தற் கூட்டம்

வலிகாமம், வடமராட்சி வலயக் கல்வி அலுவலகங்களையும் கோப்பாய்க் கோட்டக் கல்வி அலுவலகத்தையும் கொண்ட யாழ்ப் பாணம் வலயம் II இற்குட்பட்ட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை-2006 ஆளணியி னருக்கான அறிவுறுத்தற் கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்காக நியமிக்கப்பட்ட இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர் கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர் கள் தவறாது சமுகமளிக்குமாறு வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ் வரன் கேட்டுள்ளார். (ந)

பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு

ஜே/68 றெக்கிளமேசன் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பங்கீட்டு அட்டை களின் மீளாய்வு டிசம்பர் 4ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9 மணிக்கு குருநகர் தொடர் மாடி சனசமூக நிலைய மண்டபத்தில் நடை பெறும்.

தேசிய அடையாள அட்டை, பங்கீட்டு அட் டைகுடும்பஅட்டை போன்றஆவணங்களுடன் சமுக மளிக்குமாறு யாழ்.பிரதேச செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (து)

மானிப்பாய் வீதியில் குப்பைகூழம் துர்நாற்றத்தால் மக்கள் விசனம்

கல்லுண்டாய் வீதி பொதுமக்களின் பாவ னைக்குத் தடை செய்யப்பட்டுள்ளதால் அப் பகுதியில் கொட்டப்பட்டு வந்த குப்பை கூழங் களும், விலங்குகளின் கழிவுப் பொருட்க ளும் தற்பொழுது மானிப்பாய் வீதியில் கோம்பையன் மணல் மயானத்துக்கு அண் மித்த இடங்களில் கொட்டப்படுவதால் அவ் விடம் துர்நாற்றம் மிகுந்து காணப்படுவதா கவும், இக் கழிவுப் பொருட்களை உண்ண வரும் கட்டாக்காலி நாய்களினால் மக்கள் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும்,

இவ்விடயத்தை உடனடியாகக் கவனத்தி லெடுத்து இதற்கான மாற்று ஏற்பாடொன் றை யாழ்.மாநகரசபை விரைவில் செயற் படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்கள். (அ-133)

19 தபால் பொதிகள் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

திருமலைக்கு எடுத்துச் செல்வதற்காக வெளிநாட்டு மற்றும் வெளிமாவட்டத்துக் கான 19 தபால் பொதிகள் நேற்றுக் காலை தெல்லிப்பழையில் வைத்து சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக யாழ். தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரி வித்துள்ளன. (ந-133)

பொது இடங்களில் புகைத்தல், மது அருந்துதல் இன்று முதல் தடை செய்யப்படுகின்றது

பொது இடங்களில் புகைத்தல், மது அரு ந்துதல் என்பன இன்று முதலாம் திகதி முதல் தடை செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத் தடை உத்தரவை மீறி செயற்படுப வர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும்எனவும்அறிவிக்கப்பட்டுள்ளது.

தடை உத்தரவைமீறி நடப்பவர்களுக்கு இரண்டு வருடச் சிறைத் தண்டனையும் 5 ஆயிரம் ரூபா அபராதமும்விதிப்பதற்கான நடவடிக்கைகளை புகையிலை மற்றும் மது பானம் சம்பந்தப்பட்ட தேசிய அதிகார சபை மேற்கொண்டுள்ளது.

புகைத்தலை அல்லது மதுபானம் அருந் துவதை ஊக்குவிக்கும் வகையில் ஊடகங் கள் மூலம் பிரசாரம் செய்வதற்கு முழுமை யான தடை விதிக்கப்படும்.

தனியாளாகவோ நிறுவன ரீதியிலோ பிர சார்ங்கள் மேற்கொள்பவர்களுக்கு இரண்டு வருடச் சிறைத் தண்டனையும் 20 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்படும்.

புகையிலை மற்றும் மதுபாவனை கார ணமாக இலங்கை மக்களின் தேகாரோக் கியம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள் ளதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக இலங்கையில் இப் போது மரண வீதமும் அதிகரித்து வருவதா கவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது குறிப்பிடப்பட் டுள்ளது. (ந-5)

புற்றுநோயாளர்களுக்கு இலவச பால்மா

அகில இலங்கை இந்துமா மன்றம் அனு ப்பிய ஹைலன்ட் பால்மா எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் 1.30 மணி வரை கோண்டாவில் சிவபூமியில் வைத்து புற்றுநோயாளர்க ளுக்குத் தலா 2பைக்கெற்றுக்கள் இலவச மாக வழங்கப்படவுள்ளதாக சிவபூமி அமைப்பாளர் ஆறு. திருமுருகன் அறிவித் துள்ளார்.

புற்றுநோயாளர்கள் அல்லது அவர்க ளது உறவினர்கள் புற்றுநோய் மருத்துவ அத்தாட்சிப் பத்திரத்துடன் வருகை தந்து பால்மாவைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட் டுக் கொள்ளப்படுகின்றனர். (ந-133)

அண்மையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் சில்லாலை கதிரை மாதா பத்தில் இடம்பெற்ற முதலுதவிப் பயிற்சிப்பட்டறை ஆரம்ப நாளன்று இலங்கை செஞ் கத்தின் தலைவர் பேராசிரியர் V.Kகணேசலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும் லிப்பாய்பிராந்திய தொண்டர் சா.ஞானமலர் நிற் பதையும் படத்தில்காணலாம். (படம்:-கீ.றேகன்)

யாழ்.பஸ் நிலையம் பண்ணைக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். படைத்தலைமையகத்தின் அறிவு றுத்தலுக்கேற்ப யாழ். நகர பஸ் நிலையம், நேற்று முதல் பண்ணையில் அமைந்துள்ள பஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

யாழ்.நகரில் செயற்பட்ட வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் கள் யாவும் பண்ணையிலிருந்தே இயங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

பிறந்தநாள் வாழ்த்து

K.R. சிவம் தனது பிறந்தநாளை கொண்டாடினார். அவரை நலமுடன் வாழ தம்பி கிருஸ்ணா, மகாசிவம் வாழ்த்துகின் றார்கள்.

சிவன் மாளிகை,
மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு. (498)

நல்ல செயலை செய்ய நினைத்தால் உடனே செய்க. நாளும் கோளும் நல்ல செயலுக்கு சாதக மாகவேயிருக்கும்.

-சுவாமி இராமதாசர்

வலம்புரி

சர்வதேசத்தின் மௌனம் சந்தேகத்தைத் தருகின்றது

இலங்கையின் ஆட்சியாளர்களால் ஈழத் தமிழர்கள் நீண்ட காலமாக நசுக்கப்படுகின் றனர்.

சொந்த வாழ்விடங்களை கபளீகரம் செய் வது முதற்கொண்டு விமானக் குண்டுத் தாக் குதல், பல்குழல் வீச்சுக்கள், ஆட்கடத்தல்கள், கைதுகள் என அராஜகப் பட்டியல் நீண்டு செல்கின்றது.

தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக வே இத்துணை கொடூரங்கள் பௌத்த மதத் தைப் பின்பற்றுவோரால் நிறைவேற்றப்படு கின்றன.

இவற்றுக்கு மேலாக இடையிடையே இனக் கலவரம் தமிழ் மக்களைக் கொன்றொழிப்ப தும் அவர்களின் சொத்துக்களைச் சூறையா டுவதும் இனக்கலவரத்தின் நிகழ்ச்சி நிரலாக வுள்ளன.

இவை எல்லாவற்றையும் செய்து தமிழ் மக் களின் போராட்டம் வேகமாக வளர்ச்சி கண்ட தே ஒளிய அவற்றை அடக்க முடியவில்லை.

இப்போது மேற்குறித்ததற்கு மேலாக பட்டினி போட்டு அழிக்கும் படலம் ஆரம்பிக்கப்பட்டுள் ளது. அதன் ஒரு கட்டமாக ஏ-9 பாதை மூடப் பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டையும் ஏனைய மாவட்டங் களையும் இணைக்கும் பிரஸ்தாப பாதை மூடப்பட்டமையால் யாழ்.குடாநாட்டில் பஞ்ச மும் பட்டினியும் தலைவிரித்தாடுகின்றது.

மக்கள் போதிய உணவின்றி பெரும் கஷ்டப் படுகின்றனர். போசாக்குக்கான உணவின் மையால் குழந்தைகள், சிறுவர்கள், முதிய வர்கள் உடனடியான பாதிப்புக்குள்ளாகியுள் ளனர்.

இந்நிலைமை தொடருமாயின் ஒட்டுமொத் தமாக அனைவருமே போசாக்கின்மையால் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகி விடும்.

ஏ-9 பாதை மூடப்பட்டதனால் யாழ்.குடா நாட்டில் ஏற்பட்ட பொருள் தட்டுப்பாடோடு சிக் கின்குனியாவின் தாக்கமும் வேகமாகப் பரவி வருகின்றது.

நோய்த் தாக்கம் ஏற்பட்டு ஒரு மாதம் கடந்த பின்னரே சிக்கின்குனியா என்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக யாழ்.குடாநாட்டு மக்களின் வாழ் வியல் அமைந்துள்ளது.

எனினும் இத்துணை துன்பங்களை தமிழ் மக்கள் அனுபவிக்கின்ற போதிலும் சர்வதேச சமூகம் காத்து வரும் மௌனம் சந்தேகத்தை யே தருகின்றது.

எயிட்ஸ் என்னும் உயிர் கொல்லி நோயை ஒழிப்பதற்கு ஒன்றிணைவோம் வாரீர்!

பாதுகாப்பற்ற பாலியல் நடத்தைகளின போது நோய்த் தொற்றுள்ள ஒருவரிடமிருந்து மற்றவருக்கு கடத்தப்படும் நோய்களே பாலியல் தொடர்பான நோய்கள என ப்படும். தமிழர் பண்பாட்டின்படி பாலியல் பற்றிய விடயங்களைப் பற்றி பகிரங்கமாகக் கலந்துரையாடுவது தொடர்பாக பல தடைகள்உள்ளன. பயன்படுத்தும் சொற்கள், மக்களிடையே காணப் படும் மனப்பாங் குகள் போன்றவை இதில் பங்களிப்புச் செய்கின்றன. ஏனினும் கொடிய குணப்ப டுத்த முடியாத எய்ட்ஸ் ஒவ்வொருவரிலும் ஆதிக்கம் செலுத் தும் விதத்தை உணர்த்துவதும் அதனைத் தவிர்ப் பது ஒவ்வொ ருவரினதும் பொறுப்பு என்பதை உணர்த்துதலும் சுகாதார தொடர்பாடர்களின் பொறுபுகள்ஆகும் இவற்றை நடைமுறைப் படுத்துவ தில் யா/போதனா வைத்தியசாலை எய்ட்ஸ் கிளினிக், வைத் திய நிபுணர்கள், மற்றும் மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் அலு வலகம், சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் உள்ள வைத் தியர்கள், தாதியர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், களப் பணியாளர்கள், அரச சார்பற்ற நிறு வனங்கள் (UNHCR, UNICEF, RED CROSS, CHRISTIAN AID, WORLD VISION, CARE, IOM, SAVE THE CHILDREN, SOND,அரங்க செயற்பாட்டு இயக்கம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,சமூக அபிவிருத்திக்கான இணைப்புமையம், வெண்புறா, சுக வாழ்வுப் பயணம், மற்றும் பல வேறு அரச திணைக்களகங்களும், தனியார் துறையினரும் முக்கிய பங்காற்றுகின்றனர்.

ஏச்.ஐ.வீ தொற்றியோரை இனங் காண்பதற்கான சோத

வைத்திய கலாநிதி
கு. கணேசலிங்கம்.
எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்கள் தடுப்புப் பிரிவு,
போதனா வைத்திய சாலை,
யாழ்ப்பாணம்.

னைகள், ஏச்.ஐ.வீ தொற்றும் ஆபததை பெருமளவுக்குக் கொண்டுள்ளோர் யார் என அடையாளம் காணல், ஏச். ஐ.வீ தொற்றலை எவ்வாறு தடுக்கலாம் என்பதை சமூகத்தில் உள் ளோர்க்கு அறிவுட்டல், எய்ட்ஸ் குணப்படுத்த முடியாத நோயாக இருந்தாலும் ஏச். ஐ.வீ தொற்றுள்ளோருக்கு நல்ல பராமரிப் பையும் சிகிச்சைகளையும்உதவி களையும் வழங்குதல், நம்பிக்கை நிதியம் மூலம் பண உதவி வழங்குதல் போன்ற பல நடவடிக் கை களிலும் மேற்குறித்த பல நிறு வனங்கள் ஈடுபட்டுள்ளன. தற் பொழுது மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் எல்லா நிகழ்ச் சிகளையும் ஒழுங்குபடுத்தி ஒரு வினைத்திறன் மிக்க தடுப்புத் திட்டத்தினை நடைமுறைப் படுத்தி வருவது குறிப் பிடத்தககது.

யாழ்மாவட்டத்தில் பாலியல் தொடர்புகள் மூலம் கடததப் படும் நோய்கள் நீண்ட காலமாக காணப்பட்டமைக்கான சான் றுகள உள்ளன. எனினும் 1993 இல் இங்கு இனம் காணப்பட்ட எய்ட்ஸ ஆனது கொடிய குணப்படுத்த முடியாத ஒரு நோயாக காணப படுவதனால் இங்கு உள்ள மக்கள் அது குறித்து விசேட கவன்ம் செலுத்தத் தொடங்கினார்கள். தற்போது யாழ். மாவட்டத்தைப் பொறுத்தமட்டில தாழ்வான பரம்பற் போக் கினைக் கொண்ட ஒரு பிரதேசமாகவே காணப்படுகின்றது. எனினும் ஏச்.ஐ.வீ தொற்றின் தன்மைக்கேற்ப அது எக்கணத்திலும் ஒரு பாரிய பிரச்சனையாக உருவெடுக்க வாய்ப்புள்ளது. எனவே எமது பிரதேசங்களில் ஏச்.ஐ.வீ தொற்று பரவுதலைத் தடுப் பதும் தொடர்ந்தும் தாழ்வான பரம்பற் போக்குடைய பிரதேச மாக பேணி வருவதும் எல்லோரினதும் பொறுப் பாகும். குறிப்பாக எயிட்ஸ் மற்றும் பால்வினை நோய்கள் தடுப்பு பிரிவு கிளினிக் சிறப்பாக நடை பெறுவதற்கு உதவியாக உலக வங்கியின் உதவியுடன் இரண்டு மாடி கட்டிடம் யாழ். போதனா வைததிய சாலையில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது.

புள்ளி விபரம்- கார்த்திகை 2006.

உறுதிப்படுத்தப்பட்ட மொத்த ஏச.ஐ.வீ தொற்றுள்ளோர் (இறந் தவர்கள் உட்பட).

உலகத்தில் 38.6 மில்லியன்.
இந்தியாவில் 5.21 மில்லியன்.
இலங்கையில் 787
யாழ்ப்பாணத்தில் 38

	1981	1993	2006
இலங்கையில்	0	5	787
யாழ்ப்பாணத்தில்	0	2	38

யாழ் மாவட்டத்தைப் பொறுத்த அளவில் முதல் நோயாளி 1993 இல் கண்டு பிடிக்கப்பட்டார்.

1) மொத்த எய்ட்ஸ் நோயா ளிகள் - 38.
2) ஏய்ட்ஸ் நோயினால் இறநதோர் தொகை – 22.
3) தற்போது உயிருடன் இருப்ப வர்கள் - 16.
4) ஆண் : பெண் விகிதம்- 3::1 (ஆண் -27 , பெண் -11)

யாழ் மாவட்டத்தில் இன்றுவரை எய்ட்ஸ் நோயாளிகளுக்கு எச்.ஐ.வீ தொற்று ஏற்பட்ட முறைகள்.

1) பாதுகாப்பற்ற பாலுற வுகள் மூலம் - 36.
2) தாயிடம் இருந்து குழந் தைக்கு – 02
3) மற்றைய முறைகள் மூலம்- 00.

இந்த எச்.ஐ.வி தொற்றி,ற்கு தடுப்பு முறைகளோ, சிகிச் சை முறைகளோ, இன்று வரை கண்டு பிடிக்கப்படாத நிலையில் எம் முன்னே உள்ள ஒரே ஒரு மார்க்கம் விழிப்புணர்வூட்டுதல் மூல மாக தங்களை தாங்களே பாதுகர்க்கும் முறைகளை உருவாக் குதலே ஆகும். இச் செயற்பாடுகளில பொருத்தமான இலக்கினர்களுக்கு (target groups) விழிப் புணர்வு திட்டங்க ளை செயற்படுத்த பின்வரும் வள அணியினர் (பாட சாலை அதிபர்கள், பருவ மாணவர்களினது வகுப்பு ஆசிரியர்கள், சனசமூக நிலையங்கள்,மாதர் சங்கங்கள், மத பீடங்கள், சமூக அமைப் புக்கள்,விளையாட்டுக் கழகங்கள், தொழிலாளர் சங்கங்கள், தொழி லகங்கள், அதிக ஆபத்தான நடத்தைகளுக்கு உட்படக் கூடிய இலக் கினர்களின் அமைப்புக்கள்) தமது ஈடுபாட்டை முழுமையாக நல்குவது விரும்பத்தக்கது.

ஏயிட்ஸ் நோயின் சில அறிகுறிகள்-

1)உடல் நிறை குறைவடை தல் (ஒரு மாதத்திற்குள் உடல் நிறை 10% வரை குறைவடைதல்).
2)ஒரு மாதத்திற்கு மேல் நீடிக்கும் காய்ச்சல்.
3)நிணநீர்ச் சுரப்பிகள் வீங் குதல்(நெறி போடுதல்).
4)வாயினுள் பொருக்கு ஏற்படல் (candida).
5)பல்வேறு குணப்படுத்த முடியாத சரும நோய்கள்.
6)தோலில் எற்படும் புற்று நோய்கள் (Kaposi sarcoma).
7)Lymphoma- ஒருவகை புற்று நோய்.

ஏச்.ஐ.வீ தொற்றும் வழிகள்.

1) பாதுகாப்பற்ற பாலியல் தொடர்புகள் மூலம்(80%).
2) தொற்றடைந்த குருதிப் பாய்ச்சுதலினால் (தற்போது

உலக எய்ட்ஸ் தினம் ஒவ்வொரு வருடமும் மார்கழி 1ஆம் நாள் உலகு எங்கும் கொண்டாடப் படுகின்றது. இம்முறை யாழ் மாவட்டத்தில் மார்கழி 1ஆம் திகதியில் இருந்து ஒரு வாரத்திற்கு மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தினால் பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு எற்பாடாகியுள்ளது. அதனை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகின்றது.

இலங்கையில் சகல இரத்த வங்கிகளி லும் பெறப்படும் குருதி பிறிதொருவருக்குப் பாய்ச்சப்பட முன்னர் HIV சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது).

3)தொற்றடைந்த தாயிடம் இருந்து குழந்தைக்கு (கருவி லிருக்கும் போதும், பிரசவத்தின் போதும், தாய்ப் பால் ஊட்டும் பொழுதும்) வைரசு தொற்று ஏற்படலாம்.

.4)தொற்றடைந்த குருதியினால மாசடைந்த ஊசி, புகுத்தி மூலம்.

5)உபகரணங்களை கிருமி அழிக்காது மீளப் பயன்படுத்துவதன மூலம்.

4)தொற்று அடைந்த ஒருவர் நீராடிய நீச்சல் தடாகத்திலோ அல் லது ஆற்றிலே நீராடுவதனால்.

5)தொற்றடைந்தவரை கட்டித் தழுவுவதனால்.

6)தொற்றடைந்தவர் பயன்படுத்திய உணவுப் பாத்திரங்கள் , பாவனைப் பொருட்களைப் பயன் படுத்துவதனால்.

7) நுளம்பு, மூட்டுப்பூச்சி, மற்றும் ஏனைய பூச்சிகள் தீண்டுவ தால்.

8)தும்மல், இருமல் மூலம்.

9)தொற்றடைந்தவர் பயன்படுத்திய உடை, துவாய் போன் றவற்றைப் பயன்படுத்துவதனால.

10) தொற்றடைந்தவர் பயன் படுத்திய மலகூட ஆசனத் தைப் பயன்படுத்துவதனால்.

ஏச்.ஐ.வீ குருதிப் பரிசோதனையை செய்து கொள்ள வேண்டியோர் யார்?.

1)தமது பாலியல் நடத்தை தொடர் பாக சந்தேகம் ஏற்பட்டால்.
2)ஒருவருக்கு எச்.ஐ.வீ தொற்று ஏற்பட்டதாக வைத்தியர் சந்தே கப்படுவதாக இருந்தால்.
3)தொழில் வாய்ப்புப் பெறுவதற்கோ, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெறச்செல்வதற்கோ முன் தேவையாக கருதப்படும் பட்சத்தில்
4)பாய்ச்சுவதற்காக பயன்படுத்தப்படும் குருதி மாதிரி ஒவ்வொன் றிலும் எச்.ஐ.வீ தொற்று காணப்படுகின்றதா என்பதை அறிதல்.

ஆகிய சந்தர்ப்பங்களில் குரு திச் சோதனை செய்து கொள்ளல் வேண்டும்.

குருதிச் சோதனையைச் செய்து கொள்ளத் தக்க இடம் எது?.

1) எய்ட்ஸ் மற்றும் பாலியல் தொடர்புகள்மூலம்கடத்தப்படும் நோய்கள் தொடர்பான கிளினிக்குகளில்.
2)பொது வைத்தியசாலைகளி லும், ஆய்வு கூடங்களிலும்.
3)இரத்த வங்கியில் (பாய்ச் சலுக்காகப் பெறப்படும் மாதிரி கள் யாவும் சோதிக்கப்படும்).

இறுதியாக HIV/ AIDS இலிருநது உங்களால் மட்டுமே, உங் களைபாதுகாத்துக் கொள்ள முடியும். பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள், விழிப்புப் பெறுவீர்கள்.

தேசிய கல்வி நிறுவக டிப்ளோமா மாணவர்களுக்கு

தேசிய கல்வி நிறுவக பட்டப் பின் கல்வி டிப்ளோமா இரண் டாம் பரீட்சைக்கு தோற்றவுள்ள சகல ஆசிரிய மாணவர்களும் எதிர்வரும் 3ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10மணிக் கு யாழ். இந்துக் கல்லூரி நிலையத்திற்கு தவறாதுசமுகமளிக் குமாறுசிரேஷ்ட விரிவுரையாளரும் பிராந்திய இணைப்பாளரு மான திருமதி த. வில்வநாதன்கேட்டுக்கொண்டுள்ளார். (அ-133)

உதவிப் பனக் கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு-கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 2006 டிசம்பர்மாதத்துக்கான பொதுசன மாதாந்த உதவிப்பணம்,நோய் உதவிக் கொடுப்பனவுகளான புற்றுநோய், காசநோய்,தொழு நோய் என்பவற்றுக்கான கொடுப்பனவுப் பத்திரங்கள் தபால கங்கள்,உபதபாலகங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டுள் ளன.

அத்துடன் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவதற் காகக் காத்திருந்தோரில் 100 பேருக்கு 10 மாதக் கொடுப்பன வுகள் தற் காலிகமாக வழங்கப்படுகின்றது. இக்கொடுப்பனவை டிசம்பர் முதலாம் ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி சனிக்கிழ மைக்குள் தவறாமல் பெற்றுக் கொள்ளுமாறு சகல பயனாளி களும் கேட்கப்படுகின்றனர் என வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தெரிவித் துள்ளார். (ச)

வடக்குக் கிழக்கு பிரச்சினை தொடர்பாக

முஸ்லிம் தலைமைகளுடன் பேசுவதற்கான முயற்சிகளை தமிழ்த் தேசியத் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டும்

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கோரிக்கை

வடக்குக் கிழக்கு பிரச்சினை தொடர்பாக முஸ்லிம் தலைமைகளுடன் பேசுவதற்கான முன்னெடுப்புக்களை தமிழ்த்தேசியத் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் கட்சியாக பிரகடனப்படுத்தப்பட்டு 20 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு அரசியல் கட்சியாக பிரகடனப்படுத்தப்பட்ட இடமான பாஷாவிலாவில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு உரையாற்றினார்.

இந் நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள், தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கலந்து கொண்டதுடன் முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக தலைவரின் பாரியாரான அமைச்சர் பேரியல் அஷ்ரப் , ஐ.தே.க.எம்பிக்களான ஜெயலத் ஜெயவர்த்தனா, மயோன் முஸ்தபா மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் உயர் பீட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய ரவூப் ஹக்கீம் தெரிவித்திருப்பதாவது: 20 வருடங்கள் கடந்து வந்துவிட்ட பிறகு இதற்குப் பின்னரான எமது பயணம் எப்படி இருக்கப்போகிறது என்பதே இன்று முக்கியமாகிறது.

அப்படிப்பார்த்தால் முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டபோது அடைய நினைத்த இலக்குகளை இன்றும் எட்டமுடியவில்லை. அடைய நினைக்கும் இலக்குகளின் எண்ணிக்கை தான் அதிகரித்துக் கொண்டு போகிறது. வடக்குக் கிழக்கு பிரச்சினை தொடர்பாக அன்றிருந்த நிலைப்பாடுகளிலும் அபிலாசைகளிலும் எவ்வித மாற்றமும் ஏற்பட்டதாக கூறமுடியாது.

தங்களுக்கென்றொரு அரசில் கட்சி இல்லை என்பதை 1984 ஆம் ஆண்டு சர்வ கட்சி மாநாடு கூட்டப்பட்டபோதும் 1986 பெங்களூரில் பேச்சுக்கள் இடம் பெற்ற காலத்தில் முஸ்லிம்கள் உணர்ந்தனர்.

இந்த இடைவெளியை நிரப்புதவதற்காகவே ஒரு இயக்கமாக இருந்த முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் கட்சியாக பிரகடனப்படுத்தப்பட்டது. இந்தக்கட்சியின் மூல தனம் என்பது அதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அநியாயங்களும் கட்சியின் நியாயமான போக்குமே ஆகும்.

ஆனால் அண்மையில் வடக்கு கிழக்கு இணைப்புத் தொடர்பாக உயர் நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பையடுத்து முஸ்லிம் காங்கிரஸ் பற்றிய பல்வேறு விமர்சனங்கள் கூறப்படுகின்றன. குறிப்பாக வட கிழக்கு இணைப்புத் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைமையிடம் தெளிவான நிலைப்பாடு இல்லை என்று கூறுகிறார்கள்.

இது தொடர்பாக அன்றும் இன்றும் எமது நிலைப்பாடு ஒன்றுதான். நிபந்தனையற்ற வடகிழக்கு இணைப்பை நாம் எதிர்த்தோம். முஸ்லிம்களைக் கேட்காமல் வட கிழக்கை இணைத்துவிட்டு இன்று அதனைப்பிரிப்பதற்கு முஸ்லிம்களிடையே சர்வஜன வாக்கெடுப்பை நடத்த முற்படுவதை எதிர்க்கின்றோம்.

இந் நிலையில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அண்மையில் நிகழ்த்திய மாவீரர் தின உரையில் தனி ஈழத்திற்கான உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

ஜனவரியில் நடைபெற்ற சர்வகட்சி மாநாடு, இருட்டறையில் கறுத்தப்பூனையைத் தேடும் முயற்சி எனவும் குறிப்பிட்டுள்ளார். 1986 ஆம் ஆண்டு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் கட்சியாக பிரகடனப் படுத்தப்பட்டு 20 தினங்களுக்குள் இந்தியாவில் இருந்து வந்த குழுவினர் அப்போது இந்தியாவில் தங்கியிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் பேசுவதற்காக வட கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவரை அழைக்கப்படலாம் என தனது யோசனையில் தெரிவித்திருந்தனர். ஆனால் அது அப்போது நடைபெறாமல் போனது மட்டுமன்றி இன்றுவரை அவ்வாறான ஒரு பேச்சுவார்த்தை மேசையில் இரு தரப்பும் அமரவில்லை.

இன்று 20 வருடங்கள் கடந்து விட்ட நிலையில் நாங்கள் இங்கு வந்திருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் இதற்கான கோரிக்கையை வீடுக்கவிரும்புகிறோம்.

இலங்கை அரசும் இந்திய அரசும் சொல்லும் வரை முஸ்லிம் தலைமைகளுடன் பேசுவதற்காக காத்திருக்க வேண்டாம். முஸ்லிம்களால் அங்கீகரிக்கப்பட்ட தலைமைகளோடு பேசவேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டுள்ளது.

வட கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகுறித்து அவர்களது தலைமைகள் முதலில் ஒரு முடிபுக்கு வரவேண்டும். இலங்கையில் புரையோடிப்போயுள்ள பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையே தீர்வு என்பதை அமெரிக்கத் தூதுவர் சொல்லும்வரை நாம் காத்திருக்கத் தேவையில்லை.

வட கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம்கள் அதிகாரம் பெற்ற ஒரு தனித்துவ இனம் எனும் விடயத்தில் விடுதலைப்புலிகளின் தலைமை என்னுடன் எழுத்துவடிவில் உடன் பட்டிருக்கிறது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அந்த கௌரவமான ஒப்பந்தத்தின் அடிப்படையில் இரு சமூகங்களும் பேசவேண்டிய காலம் நெருங்கி வந்திருக்கிறது.

எனவே முஸ்லிம் தேசிய தலைவருடன் பேசுவதற்கான முயற்சிகளை தமிழ்த்தேசிய தலைவர்கள் எடுக்கவேண்டும். இன்று அமைச்சுப் பதவிகளில் இருக்கும் பத்து முஸ்லிம்களில் 9 பேர் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்றவர்கள்.

நானும் அரசுடன் போய் சேர்ந்து அவர்களால் சாதிக்க முடியாத எதனை சாதித்துக் காட்ட முடியும்? எனவே தான் பிரிந்து சென்ற அனைவரையும் மீண்டும் எம்மோடு இணைந்து கொள்ளுமாறு முஸ்லிம் காங்கிரஸ் அழைப்பு விடுகிறது என்றார். (ந-5)

க.கா.குழுவின் பிரதித்தலைவருடன் யுத்தநிறுத்தம் பற்றி பேசவில்லை

ஊடகங்களில் வந்த செய்தியை மறுக்கிறார் புலிகளின் இராணுவப் பேச்சாளர்

(கிளிநொச்சி)

போர் நிறுத்த உடன்படிக்கையை தாங்கள் இன்னமும் கடைப்பிடிப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பில் தங்களிடம் கூறியதாக போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் தெரிவித்ததாக ஊடகங்களில் வெளியான செய்தியை விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் லண்டன் பி.பி.எஸ்.தமிழோசைக்கு கருத்துத் தெரிவிக்கையில், உண்மையிலேயே கடந்த 28 ஆம் திகதி கிளிநொச்சியில் நடந்த சந்திப்பானது ஜஸ்லாந்தின் இராஜதந்திரப்பிரதிநிதிக்கும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு மிடையிலான ஓர் அறிமுகப்படுத்தும் மற்றும் மரியாதைக்குரிய சந்திப்பேயாகும்.

இச் சந்திப்பிலே கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் கலந்து கொண்டார். கண்காணிப்புக்குழுவினர் கொழும்புக்குத் ஏதாவது தகவல் இருக்கிறதா என கேட்டார்.

இதற்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் மிகத் தெளிவாக பதில் கூறினார். தேசியத் தலைவருடைய கொள்கைப்பிரகடன உரை தான் இப்போது எல்லோருக்குமான தகவல் என்று சொன்னார்.

அப்படியானால் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் கூறிய கருத்து தவறானதா என கூறுவீர்களா எனக் கேட்டதற்கு பதிலளித்த இளந்திரையன்;

அவர் சில கருத்துக்களை தெரிவித்திருப்பதாக ஊடகங்களில் கூறப்பட்டுள்ளது. அதனைப்பற்றி எமது அரசியல்துறைப் பொறுப்பாளர் எதிர்வரும் 4 ஆம் திகதி கிளிநொச்சிக்கு வரவுள்ள நோர்வேயின் சிறப்புப் பிரதிநிதி ஹான்சன் பௌயரிடம் தெளிவாக பேசுவார் என்றார். (ந-5)

நோர்வேயின் சமாதானத்...

நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் ஒருவார கால விஜயமாக நேற்று அதிகாலை இலங்கை வந்தடைந்தார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் அரசின் தொடர்ச்சியான செயற்பாடுகளினால் செத்துச் செயலிழந்து விட்டது எனவும் இனப்பிரச்சினைக்கான ஒரே வழி சுதந்திர தமிழீழ தனி அரசு அமைப்பதுதான் என்று தெரிவித்துள்ள நிலையில் ஜோன் ஹான்சன் பௌயருடைய விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

நேற்றுக் காலை அரச தரப்பினர் சார்பாக பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் சந்தித்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர், மாலை அரச சமாதான தூதுக் குழுத் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவையும் அவரது அமைச்சில் சந்தித்து விரிவாக பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தையின் போது விடுதலைப்புலிகளின் தலைவரின் மாவீரர் தின உரையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்து தெரிவித்த கருத்துக்கள், அதனால் தேவைப்படும் தெளிவுபடுத்தல்கள், யாழ். மாவட்டத்திலும் வாகரைப் பகுதிகளிலும் உள்ள மக்களுக்கான உணவு மனிதாபிமானப் பிரச்சினைகள் மற்றும் ஏ-9 வீதி திறப்புப் போன்ற விவகாரங்கள் குறித்து இப் பேச்சுவார்த்தையின் போது அதிக கவனம் செலுத்தப்பட்டதாக சுகாதார அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நோர்வேயின் சமாதானத் தூதுவரது விஜயம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள நோர்வேத் தூதரகப் பேச்சாளர், எதிர்வரும் திங்கட்கிழமை ஹான்சன் பௌயர் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்த இருப்பதாகவும் அதன்பின்னர் அவர் அது குறித்து அரச தரப்பினரிடம் விளக்கமளிக்கவிருப்பதாகவும் தெரிவித்தார். (ந-5)

கொழும்பு ஐங்கில நாளேட்டின்...

சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல் ஹெய்ம், நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் வீடொன்றை வாங்குவதற்கு விடுதலைப்புலிகள் பண உதவி செய்தார்கள் என்றும் விடுதலைப்புலிகளின் ஆலோசகர் பாலசிங்கத்திற்கு எரிக் சொல் ஹெய்ம் பதினாறு மில்லியன் நோர்வேஜியன் குரோனர்கள் அளித்தார் என்றும் மேலும் எரிக்சொல் ஹெய்ம் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு படம் பார்ப்பதற்காக தொலைக்காட்சி திரையொன்றை அளித்தார் என்றும் குறித்த ஆங்கிலப் பத்திரிகையொன்றில் வெளியிடப்பட்ட செவ்வியில் கூறப்பட்டுள்ளது.

கேள்வி பதில் முறையில் வெளியிடப்பட்ட இந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்த மேற்படி தகவல்கள் முற்றும் முழுதாக பிழையானதும் பொய்யானதும் என இந்த சந்தர்ப்பத்தில் நோர்வே வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

மேலும் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு எதிர்காலத்தில் எவ்வாறு செயற்படவேண்டும் என சொல் ஹெய்ம் ஆலோசனை வழங்கியதாகவும் அந்த செவ்வியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதுவும் யதார்த்தமில்லாத அசட்டுத்தனமான அபத்தமான குற்றச்சாட்டு என்றும் நோர்வே தெரிவித்துள்ளது.

இவ்வாறான பொய்யான குற்றச்சாட்டுகளையும் ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளையும் மேற்படி பத்திரிகை வெளியிட்டமை துரதிஷ்டமானது.

நோர்வே வெளிவிவகார அமைச்சு இது குறித்து மேலதிக விளக்கங்களை எதிர்பார்க்கிறது. நோர்வே அரசு இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இரு தரப்பின் கோரிக்கைக்கும் இணங்க தொடர்ந்தும் பக்கச்சார்பற்ற அனுசரணையாளராக செயற்பட அர்ப்பணிப்புடன் உள்ளது என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ந-5)

தற்காலிகமாகவேனும்...

ஜனாதிபதி இந்தியாவில் தெரிவித்ததைப் போல சமாதானத்தை இறுக்கிப்பிடித்துக் கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால் இவை அனைத்துக்கும் விடுதலைப்புலிகளும் தெற்கில் உள்ள அடிப்படைவாதிகளும் இணங்கப்போவதில்லை எனவும் விடுதலைப்புலிகள் கடந்த சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஏ-9 வீதியை திறப்பதற்கு நிபந்தனை முன்வைத்தார்கள் எனக் குறிப்பிட்ட அவர்;

எதிர்ப்புக்கள் கோரிக்கைகள் யோசனைகளைக் கருத்திற்கொண்டு ஏ-9 வீதியை தற்காலிகமாகவேனும் திறப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டுமென் பிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். (ந-13)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.